அலுவலக உபயோகத்திற்கு | JK / PROC / SUP / 08/01/2018

# மாதிரி விண்ணப்பப் படிவம்.
# 2019ம் ஆண்டிற்கான வழங்குநர்கள்,மற்றும் ஒப்பந்தகாரர்களைப் பதிவு செய்தல்
# மாவட்டச் செயலகம் - யாழ்ப்பாணம்.

01. வியாபார நிறுவனத்தின் பெயர் : ....................................................................................................

02. வியாபார நிறுவனத்தின் முகவரி : ....................................................................................................

03. உரிமையாளரின் பெயர் : ....................................................................................................

04. தே. அ. அ. இலக்கம் : ....................................................................................................

05. வியாபார பதிவிலக்கமும் திகதியும் : ....................................................................................................

(பதிவுப்பிரதியின் நிழற்பிரதி இணைக்கப்படல் வேண்டியது அவசியமானது)

06. (I) தொலைபேசி மற்றும் தொலைநகல் இல. :..........................................................................................

(II) கையடக்க தொலைபேசி இல. :.........................................................................

07. வியாபாரத்தின் தன்மை :-...........................................................................

08. பதிவு செய்யப்படவேண்டிய பொருட்கள் / வேலைகள் / சேவைகளின் தொகுதி

| தொகுதி இல | பொருட்கள் / வேலைகள் / சேவைகள் விபரம் |
|---|---|
| | |

9. வங்கியாளர்களின் பெயர்கள் :-...........................................................................

10. கடன் வசதி வழங்கப்படவுள்ள காலப்பகுதி :-...........................................................................

11. யாழ் மாவட்டத்தில் வழங்கல் செய்யக் கூடிய பிரதேச செயலகங்கள் :-..............................................

..........................................................................................................................................................

12. மின்னஞ்சல் முகவரி :- ..........................................................................................................

13. வருமான வரி செலுத்துபவராக இருப்பின் அதன் விபரங்கள்

..........................................................................................................................................................

14. முகவராக இருப்பின் அவை தொடர்பான விபரங்கள் (ஆவணங்களின் நிழற்படப்பிரதியுடன்)

..........................................................................................................................................................

15. VAT, NBT இலக்கம் இருப்பின் அதன் விபரம் (ஆவணங்களின் நிழற்படப்பிரதியுடன்)

..........................................................................................................................................................

16. ICTAD, CIDA இலக்கம் இருப்பின் அதன் விபரமும், அதில் என்ன வகுப்பில் பதிவு செய்யப்பட்டுள்ளீர்கள் என்ற விபரமும் (ஆவணங்களின் நிழற்படப்பிரதியுடன்)

..........................................................................................................................................................

17. என்னால் தெரிவிக்கப்பட்ட விபரங்கள் யாவும் சரியானவை எனவும், அரசாங்க அதிபர் அவர்களால் விதித்துரைக்கப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக பொருட்கள் / வேலைகள் / சேவைகளை வழங்குவதற்கும் உறுதியளிக்கின்றோம். பதிவுக் கட்டணம் ரூபா ............. வினை 2018/..../.....ந் திகதி மாவட்டச் செயலக இலங்கை வங்கியில் வைப்புச் செய்து அதற்கான வைப்புச் சிட்டை இதனுடன் இணைத்து அனுப்பப்படுகின்றது.

| | | |
|---|---|---|
| ............................. | .................................... | ..................... |
| விண்ணப்பதாரியின் ஒப்பம் | பெயர் | திகதி |
| (உத்தியோக பூர்வ முத்திரை) | | |

## 2019ம் ஆண்டிற்கான வழங்குநர்களையும், ஒப்பந்தகாரர்களையும் பதிவு செய்தல் மாவட்டச் செயலகம் - யாழ்ப்பாணம்.

யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்திற்கும், கீழ் குறிப்பிடப்படும் 15 பிரதேச செயலகங்களுக்கும் 2019ம் ஆண்டு காலப்பகுதிக்குரிய வேலைகள், பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்குவதற்கு பதிவு செய்ய விரும்பும் வடபிராந்தியத்திலுள்ள தரம் வாய்ந்த வழங்குநர்கள், உற்பத்தியாளர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| | | | |
|---|---|---|---|
| 1. யாழ்ப்பாணம் | 2. நல்லூர். | 3. தெல்லிப்பளை | 4. வேலணை |
| 5. உடுவில் | 6. சண்டிலிப்பாய் | 7. சங்கானை | 8. கோப்பாய் |
| 9. கரவெட்டி | 10. பருத்தித்துறை | 11. சாவகச்சேரி | 12. மருதங்கேணி |
| 13. ஊர்காவற்றுறை | 14. காரைநகர் | 15. நெடுந்தீவு | |

### பொதுவான நிபந்தனைகள்

### I.வழங்குநர்களைப் பதிவு செய்தலுக்குரிய நிபந்தனைகள்

1 இவ் வழங்குநர்களையும் ஒப்பந்தக்காரர்களையும் பதிவு செய்தலானது 2019ம் ஆண்டுக்கு மட்டும் செல்லுபடியாகும்

2. பொதுவாக பதிவு செய்யப்பட்ட வழங்குநர்கள் / ஒப்பந்தக்காரர்களிடமிருந்து விலைமனு கோரப்படும். எனினும் ஏனையவர்களிடமும் விலை மனு கோரும் உரிமை கொள்வனவுதாரருக்கு உண்டு.
3. விண்ணப்பங்களைப் பதிவுசெய்தலானது முறையான தரப்படுத்தலுக்கும் மதிப்பீட்டிற்கும் உட்படுத்தப்பட்டே மேற்கொள்ளப்படும். பிழையான விவரங்கள் வழங்கப்பட்டிருப்பின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
4. வியாபாரப் பதிவு செய்யப்பட்ட வியாபாரத் தன்மை அல்லது அதனுடன் தொடர்புள்ள பொருட்கள் சேவைகளுக்கு மட்டுமே வழங்குநர்களாகப் பதிவு செய்துகொள்ள முடியும்.
5. விண்ணப்பப் படிவத்துடன் பின்வரும் ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
   - வியாபாரப் பதிவுச் சான்றிதழின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதி
   - உள்ளூர் அதிகார சபையினால் வழங்கப்பட்ட வியாபார உரிமத்தின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதி
6. யாழ்மாவட்டத்தில் குறைந்தது ஒரு இடத்திலேனும் தங்கள் நிறுவனத்தின் ஒரு கிளை / ஒரு காட்சியறை / முகவர் / அங்கீகரிக்கப்பட்ட முகவர் ஆகியவற்றில் ஒன்றையேனும் வைத்திருத்தல் வேண்டும்.
7. வழங்குநர்கள், ஒப்பந்தக்காரர்கள் தாம் பொருட்கள், வேலைகள் மற்றும் சேவைகளை வழங்க விரும்பும் பிரதேச செயலகத்தினை தெரிவு செய்தல் வேண்டும்.
8. வழங்குநர்களுக்கு பெறுகைக்கான முற்பணங்கள் எதுவும் வழங்கப்படமாட்டாது
9. ஒவ்வொரு தொகுதிக்கும் தனித்தனியான விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்பதுடன் பதிவுக்கட்டணமும் தனித்தனியே செலுத்தப்பட வேண்டும்.
10. பதிவுக்கான விண்ணப்பங்கள் யாவும் மாவட்டச்செயலக பெறுகை அலகில் நேரடியாகவோ அல்லது எமது இணையத்தளத்தினூடாகவோ அல்லது முத்திரையிடப்பட்டு சுயவிலாசம்

எழுதப்பட்ட கடித உறையை அனுப்புவதன் மூலமோ பெற்றக்கொள்ளலாம். ( கோரப்படும் கேள்விகளுக்கான குறுந்தகவல்கள், தங்களது பதிவு ஏற்றுக்கொள்ளப்பட்டவுடன் தங்களுக்கு எம்மால் அறியத்தரப்படும் தகவலுக்கு ஏற்ப, தங்களது தொலைபேசிக்குக் எமது செயலக குறுந்தகவல்கள் கிடைக்கக்கூடியவாறு, படிமுறைகளை (settings) செய்திருப்பீர்களாயின், தங்களது தொலைபேசிக்குக் கிடைக்கப்பெறும் ). பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவத்துடன் வியாபாரப்பதிவுச் சான்றிதழின் பிரதி, வரிப்பதிவுச் சான்றிதழின் பிரதி இணைக்கப்பட்டு 2018-12-20ந் திகதிக்கு முன்பாக " மாவட்டச் செயலாளர், மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்" எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும். விண்ணப்பங்கள் அனுப்பும்போது தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் "2019ம் ஆண்டிற்கான வழங்குநர்களைப் பதிவு செய்தல்" எனக் குறிப்பிட்டு பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

11. மீளளிக்கப்படாத வைப்புப் பணத்தினை "மாவட்டச் செயலாளர், மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்" எனும் பெயரில் உள்ள 7041946 எனும் இலங்கை வங்கி கணக்கிலக்கத்தில் பணமாக வைப்பில் இட வேண்டும். வைப்பிலிடப்பட்ட பணத்திற்கான வைப்புச்சிட்டையை விண்ணப்பப்படிவத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும்.
12. முடிவுத் திகதிக்கு (20.12.2018) பின்பு கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் யாவும் நிராகரிக்கப்படும்.

13. மேலதிக விளக்கங்களுக்கு www.jaffna.dist.gov.lk எனும் இணையத் தளத்தில் அல்லது **"கணக்காளர் (பெறுகை), மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம் "** எனும் செயலகத்துடன் தொலைபேசி இல: **0212214633** மூலம் தொடர்புகொள்ள முடியும்.

14. பதிவு செய்யப்பட்ட வழங்குநர்கள் / ஒப்பந்தக்காரர்கள் விலை மனு கோரப்படும் போது அதனைக் கருத்தில் கொள்ளாது விட்டாலோ அல்லது உரிய காலத்தினுள் பொருளினை வழங்க அல்லது வேலையினை நிறைவு செய்யாது விட்டாலோ அல்லது வழங்கப்பட்ட மாதிரி அல்லது நிபந்தனைகளை ஒத்துப்போகாமல் விட்டாலோ அத்தகைய வழங்குநர்கள் / ஒப்பந்தக்காரர்கள் எதிர்காலத்தில் விலை மனு கோரப்படும்போது கவனத்தில் கொள்ளப்படமாட்டார்கள்.
15. பெற்றுக்கொள்ளப்படும் விண்ணப்பப்படிவத்தினை காரணமெதனையும் முன்வைக்காது ஏற்றக்கொள்ளவோ அல்லது நிராகரிக்கவோ அரசாங்க அதிபர் அவர்களுக்கு உரிமை உண்டு.

| தொகுதி இல | பொருட்கள் விபரம் | தொகுதி இல | பொருட்கள் விபரம் |
|---|---|---|---|
| G-01 | காகிதாதிகள், எழுதுகருவிகள், மற்றும் பாடசாலை உபகரணங்கள | G-10 | பன்சி பிளாஸ்ரிக் உற்பத்திகள், தோ உற்பத்திகள் மற்றம் சமய உபகரணங்கள் ( சில்வர் மற்ற ஏனையவை ) |
| G-02 | சுத்திகரிப்புப்பொருட்களும் உபகரணங்களும் | G-11 | திரைச்சீலைகள், சீருடைகள், மேசைவிரிப்புக்கள், படுக்கை விரிப்பு, மெத்தை, நிலவிரிப்புக்கள், பொன்னாடைகள் மற்றும் துணிவகைகள |
| G-03 | காலை மதிய மற்றும் இரவு உணவு வகைகள், சிற்றுண்டி வகைகள் குடிநீர்வகைகள், பால் மா வகைகள், உள்ளூர் உணவு உற்பத்தி மற்றும் சிற்றுண்டி வகைகள | G-12 | தோல்வகை உற்பத்திப் பொருட்களும், விளையாட்டுப் பொருட்களும் மற்றும் அழகுசாதனப் பொருட்களும |
| G-04 | கணனிகள் அச்சிடும் உபகரணங்கள் மற்று தகவல் தொழில்நுட்ப சாதனங்களு அவற்றுக்கான உபகரணங்கள் மற்றும் நுகர்வு பொருட்கள் ( ரோனர் மற்றும் றிபன் ) | G-13 | அச்சிடுதல், புத்தகம் கட்டுதல், இறப்பர் முத்திரைகள், திகதி முத்திரைகள் பிளாஸ்ரிக் பெயர்ப் பலகைகள், அலுவலக அடையாள அட்டைகள |

| | | | |
|---|---|---|---|
| G-05 | பிரதியெடுக்கும் இயந்திரங்கள் அச்சிடும் உபகரணங்கள் மற்றும் அவற்றுக்கான உதிரிப்பாகங்கள் | G-14 | மோட்டார் வாகனங்களை வழங்கல், வாடகைக்கு வழங்கல், திருத்துதல் பராமரிப்பு செய்தல், ரயர், ரியூப், பற்றறிகள், உதிரிப்பாகங்கள் வழங்கல |
| G-06 | இலத்திரனியல் மின்சாரப் பொருட்கள் மற்றும் மின் உபகரணங்கள | S-1 | பாதுகாப்பு சேவை, உள்ளக தொலைபேசி, ஒலிபெருக்கி, ஒலிவாங்கி, புகைப்படப்பிடிப்பு, ஒளிப்படப்பிடிப்பு வளிபதனாக்கிகள், போட்டோப் பிரதி இயந்திரங்கள், மோட்டார் வாகனங்கள், மலசல கூடங்கள் சுத்திகரிப்பு மற்றும் அலுவலக சுத்திகரிப்பு சேவை, சுத்திகரிப்புப் பொருட்கள |
| G-07 | தொலைத் தொடர்புக்கான சாதனங்கள், உள்ளக தொலைபேசி இணைப்புகள் மற்றும் கண்காணிப்பு கமராக்கள | G-15 | விவசாய, மீன்பிடி, உபகரணங்கள் |
| G-08 | பலசரக்கு மற்றும் உணவுப்பொருட்கள | G-16 | தளபாடங்கள் / வழங்குனர்கள் திருத்துனர்கள் |
| G-09 | கட்டிடப் பொருட்கள் மற்றும் உபகரணங்கள் | G-17 | எந்திரவியல் பொருட்கள்,ஏனையவை |
| W-01 | கட்டிட நிர்மாண வேலைகள் | G-18 | மருத்துவ உபகரணங்கள் |

மேற்படி பொருள்கள் சேவைகள் வழங்குனர்களாகப் பதிவு செய்வதற்கு மீளளிக்கப்படாத வைப்புத் தொகையாக ரூபா 500.00 ஐ செலுத்தி விண்ணப்பப்படிவங்களைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

## பகுதி – II

## ஒப்பந்ததாரர்களைப் பதிவு செய்தல்

### ஒப்பந்ததாரர்களாகப் பதிவு செய்து கொள்வதற்குரிய தகைமைகள் :-

1. CIDA நிறுவனத்தில் நிருமாணதாரர்களாகப் பதிவு செய்து கொண்டுள்ள ஒப்பந்ததாரர்கள் ரூபா 10,000,000/= (ரூபா பத்து மில்லியன்) வரையிலான சிறிய ஒப்பந்த வேலைகளின் பொருட்டு தம்மைப் பதிவு செய்து கொள்ளத் தகுதியுடையோராவார். **அத்துடன் பதிவு செய்து கொண்டுள்ள சங்கங்கள் ரூபா 2,000,000/= (ரூபா இரண்டு மில்லியன்) பெறுமதியான ஒப்பந்த வேலைகளைச் செய்யும் தகுதியைக் கொண்டிருக்கும்.**
2. தகைமைகளையும், உடைமைகளையும் உறதிப்படுத்துவதற்கான சான்றாவணங்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். (அவற்றின் பிரதிகள் விண்ணப்பத்துடன் இணைக்கப்படவேண்டும்.)
3. நிர்மாண வேலைகளுக்கு பதிவு செய்து கொள்ள விரும்பும் ஒப்பந்தக்காரர்கள் மீள் அளிக்கப்படாத கீழ் குறிப்பிடப்பட்ட வைப்புத் தொகையினை “அரசாங்க அதிபர், மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்” எனும் பெயரில் உள்ள 7041946 எனும் இலக்க இலங்கை வங்கிக் கணக்கில் வைப்பில் இட வேண்டும். வைப்பிலிடப்பட்ட பணத்திற்கான வைப்புச் சீட்டு விண்ணப்பப் படிவத்துடன் இணைக்கப்பட்டு 2018-12-20ந் திகதி அல்லது அதற்கு முன்பாக “மாவட்டச் செயலாளர் மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்” எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

விண்ணப்பங்கள் அனுப்பும் போது தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் "2019ம் ஆண்டிற்கான ஒப்பந்ததாரர்களை பதிவு செய்தல்" எனக் குறிப்பிட்டு நேரடியாக அல்லது பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

4. **விண்ணப்பப் படிவமும் பதிவு செய்தலும்** - பதிவுகளை மேற்கொள்வதற்கு மீளளிக்கப்படாத கீழ்க்காணும் தொகைகளை செலுத்துவதன் மூலம் முன்தகைமையினை (Pre-Qualification) உறுதிப்படுத்துவதற்கான படிவத்தினைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும். பதிவு செய்யப்பட்டுள்ள சங்கங்கள் இப்பதிவுக் கட்டணத்தை செலுத்தத் தேவையில்லை.

| ஒப்பந்த தொகை | பதிவுக் கட்டணம். |
|---|---|
| ரூபா 2,000,000 க்கு சமமான அல்லது அதற்கு குறைவான ஒப்பந்த தொகை | ரூபா 2,000 |
| ரூபா 2,000,000 க்கு அதிகமானதும் ரூபா 5,000,000 க்கு சமமான அல்லது அதற்கு குறைவான ஒப்பந்த தொகைக்கு | ரூபா 3,000 |
| ரூபா 5,000,000 க்கு அதிகமானதும் ரூபா 10,000,000 க்கு சமமான அல்லது அதற்கு குறைவான ஒப்பந்த தொகைக்கு | ரூபா 5,000 |

நா.வேதநாயகன்,

மாவட்டச் செயலாளர் / அரசாங்க அதிபர்

யாழ் மாவட்டம்.